

அரியலூர் மாவட்டம் செந்துறை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் ஒன்றிய கழக செயலாளர் பூ.செல்வராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் சஞ்சய் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகிறார்!

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் - இரண்டாவது பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, ஆக. 31-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழியின் அறிக்கை வருமாறு:



கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்ட மன்ற பொதுத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறுவோம் என்ற இலக்கை நோக்கி திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக, இரண்டாவது பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (01.09.2024 -ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு திருச்சி காவேரி பாலம் சிந்தாமணி அருகில் உள்ள தேசிய பள்ளி மைதானம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கடமை கண்ணியம் கட்டுப்பாடோடு தலைமை கழகத்தின் கட்டளையை தொடர்ந்து செயல்படுத்துவோம் இணைந்து பணியாற்றுவோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ.அறிக்கை!

கள்ளக்குறிச்சி ஆக.31-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று(31.08.2024 -சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் கள்ளக்குறிச்சி சேலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள வி.ஏ.எஸ். தனியார் திருமண மண்டபத்தில் வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ஏ.ஜெ. மணிக்கண்ணன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறுகிறது.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னாள்,இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்டத் துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,

கழக மூத்த முன்னோடிகள் உள்பட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக முப்பெரும் விழா, 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள், கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வடக்கு மாவட்ட கழக செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சித்தலூர் ஊராட்சியில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாமில் 97 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. - மாவட்ட ஆட்சியர் வழங்கினர்!

கள்ளக்குறிச்சி, ஆக. 31-

கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் ஒன்றியம்,சித்தலூர் ஊராட்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் மற்றும் மனுக்கள் பெறும் முகாம் நடைபெற்றது,இந்த முகாமிற்கு மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை தாங்கினார். தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் எம்.எல்.ஏ வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலை வகித்தார்,இதில் வருவாய்த் துறை சார்பில் ரூ.4,01,120 மதிப்பீட்டில் வீட்டுமனை பட்டா 12 நபர்களுக்கும், பட்டா மாற்றம் 35 நபர்களுக்கும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறும் ஆணை 28 நபர்களுக்கும்,ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ரூ.20,745 மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரம் 3 நபர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.20,900 மதிப்பீட்டில் இலவச சலவை பெட்டி 5 நபர்களுக்கும், ரூ.34,575 தையல் இயந்திரம் 5 நபர்களுக்கும், வேளாண்மைத்துறை சார்பில் தலா ரூ.2,000 மதிப்பீட்டில் வேளாண் உபகரணங்கள் 2 நபர்களுக்கும்,

தோட்டக்கலைத்துறை சார்பில் ரூ.1,84,823 மதிப்பீட்டில் நுண்ணீர் பாசன திட்டம் 1 நபருக்கும், ரூ.3,000 மதிப்பீட்டில் வேளாண் இடு பொருட்கள் 1 நபருக்கும். தாட்கோ மூலம் ரூ.42,39,640 மானியத்தில் தொழில் முனைவோர் கடனுதவி 4 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.1,05,000 மதிப்பீட்டில் சக்கர நாற்காலி 1 நபருக்கும் என மொத்தம் 97 பயனாளிகளுக்கு ரூ.55,17,803 மதிப்பீட்டில் இலவச



தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் ராமாயி மண்டபத்தில் காரிமங்கலம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் இல.கிருஷ்ணன் ஏற்பாட்டில் ஒன்றிய செயல்வீரர்கள், பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் கழக பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.உடன் தருமபுரி எம்.பி.ஆ.மணி,மாவட்ட அவைத்தலைவர் மனோகரன்,ஒன்றிய செயலாளர்கள் எம்.வீ.டி பால்,அன்பழகன்,முனியப்பன்,மூத்த வழக்கறிஞர் சந்திரசேகர்,ஒன்றிய அவைத்தலைவர் தீர்த்தகிரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்டம் மாநகரில் உள்ள சேலம் பட்டு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு 10% ஊதிய உயர்வு வழங்க முதல்வர் உத்தரவிட்டதையொட்டி மாவட்ட கழக செயலாளர். இரா . இராஜேந்திரன் எம்.எல்.ஏ. 1439 உறுப்பினர்களுக்கும் 10% ஊதிய உயர்வினை வழங்கினார். உடன் கேபிள் ராஜா, பி.வி. சாந்தாராம், சீனிவாசன். பிரகாஷ்ரவிச்சந்திரன் ஆகியோர் இருந்தனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.8.72 கோடியில் 7 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஆக.31-

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட சிங்கராயபுரம், நல்லனம், உட்கோட்டை, கல்லாத்துர், ரெட்டிதத்தூர், அய்யூர் மற்றும் அழகாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.8.72 கோடி மதிப்பீட்டில் 07 புதிய தார் சாலைகள் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், குடிநீர் வசதிகள், பள்ளி கட்டடங்கள் உள்ளிட்டவற்றை மேம்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிங்கராயபுரம் கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.43.62 இலட்சம் மதிப்பீட்டில் கோட்டியால் காடு வெட்டாங்குறிச்சி சாலை முதல் சிங்கராயபுரம் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், அதனைத் தொடர்ந்து, நல்லனம் கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.78.78 இலட்சம் மதிப்பீட்டில் நல்லனம் முதல் நாயகனைப்பிரியாள் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர், உட்கோட்டை ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.121.18 இலட்சம் மதிப்பீட்டில் உட்கோட்டை முதல் மேட்டுப்பாளையம் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, கல்லாத்துார் ஊராட்சியில் பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.126.67 இலட்சம் மதிப்பீட்டில் கல்லாத்துார் முதல் கல்லேரி, இருதயபுரம், சலுப்பை வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர் ரெட்டிதத்தூர் கிராமத்தில் பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.229.87 இலட்சம் மதிப்பீட்டில் ரெட்டிதத்தூர் முதல் சூரப்பள்ளம், விளந்தை, தென்னுார் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், தொடர்ந்து அழகாபுரம் ஊராட்சியில் பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.224.15 இலட்சம் மதிப்பீட்டில் அழகாபுரம் முதல் விழுதுடையான் இராஜேந்திரபட்டினம் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர், அய்யூர் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.47.70 இலட்சம் மதிப்பீட்டில் அய்யூர் ஊராட்சி வீரனார் கோயில் முதல் காசாம்பள்ளம் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும் என மொத்தம் ரூ.8.72 கோடி மதிப்பீட்டில் 07 புதிய தார்சாலைகள் அமைக்கும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு, விரைவாக முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சித்துறை) மாது, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் க.தர்மதுரை, எஸ்.ஆர்.இராமராஜன், என். ஆர்.இராமதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் தேசிய உணவு தொழில்நுட்ப நிறுவன தொழில் முனைவோர் மற்றும் மேலாண்மை கூட்டரங்கில் தொழில் முனைவோர் மற்றும் ஸ்டார்ட் அப்ஸ் மாநாட்டினை ஆட்சித் தலைவர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம் 28.8.2024 அன்று தொடங்கி வைத்தார். தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி தேசிய உணவு தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் வி.பழனிமுத்து மற்றும் பலர் உடன் உள்ளனர்.

(சித்தலூர் செய்தி தொடர்ச்சி)

மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது, முன்னதாக பல்வேறு துறை சார்பாக அரசு திட்டங்கள் குறித்தும், அதனை பெறும் பயனாளிகள் குறித்தும் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை எம்.எல்.ஏ. வசந்தம் கார்த்திகேயன், ஆட்சியர் பிரசாந்த் பார்வையிட்டனர்.

இதில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், தியாகதுருகம் ஒன்றிக்குழு தலைவர் தாமோதரன், துணைத் தலைவர் நெடுஞ்செழியன். கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர். லூர்து சாமி, மாவட்ட திட்ட மேலாளர்(தாட்கோ) பியர்லின், வட்டாட்சியர் கமலக் கண்ணன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி**

**ஆகஸ்ட் 31 (2012)**



தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். ‘மிசா’வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

“அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**